குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.160/2020

அ.சா. 1

2024–ம் ஆண்டு மார்ச் 22–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனி | ஜாதி | |
| தந்தை பெயர் | கந்தக்கவுண்டர் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.35 மணி,

Accused A1.Gunasekaran, present. A2.Palaniammal, A3.Tamilvanan, A4.Manju absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr.Srinivasan present for Advocate Mr.R.Balu for accused. APP Mr.M.Suresh Present.

**முதல் விசாரணை:**

1. நான் ஜாலிக்காட்டில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 08.08.2017 ம் தேதி பகல் 03.30 மணியளவில் எதிரிகள் அனைவரும் சுமார் 20–30 ஆட்களை கூட்டிவந்து டிரேக்டர் மூலம் எனக்கு சொந்தமான நிலத்தை உழுதார்கள். நான் அதை கேட்டதற்கு மஞ்சு என் கன்னத்தில் அறைந்து என்னை கீழே தள்ளிவிட்டார். எனது மனைவி ரோஜா டிரேக்டர் முன்பாக நின்று ஓட்டக் கூடாது என்று தடுத்தார்.

2. குணசேகரன் மற்றும் பழனியம்மாள் ஆகியோர் சேர்ந்து என் மனைவி ரோஜாவை கையால் அடித்தார்கள். நான் பெங்களூரில் வேலை செய்யும் என் மகனுக்கு தகவல் சொல்லிவிட்டு 108 ஆம்புலன்ஸின் மூலமாக ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்றேன். அப்போது அங்கு போலீசார் வந்து விசாரணை செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (அந்த புகார் வாக்குமூலம்

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2024.03.22 18:11:51 +0530

அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 01.44 மணி,

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2024.03.22 18:11:56 +0530